[1981 பிப்ரவரி 9

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ரூ. 56.35 இலட்சத்தில் அமைக்கப்படும். பராமரிப்புச் செலவு ரூ. 1.65 இலட்சம்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டிக்கு வைகை நதியில் இருந்து தண்ணீர் கொடுக்கும் திட்டம் 1979 ஆம் ஆண்டிலேயே தொடங்குவதாக இருந்தது. காலதாமதம் ஏன் என்று தெரியவில்லை. 1982 வரையில் காத்து இருக்காமல், வரும் நிதியாண்டிலேயே எடுத்துக் கொள்ள அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. 1982 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, வைகை நதியில் இருந்து உசிலம்பட்டிக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டத்தால் இடையில் உள்ள கிராமங்களுக்கும் பயன் கிடைக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரமான தகவல் என்னிடத்தில் இல்லை.

ஆயக்குடி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கு திட்டம்.

*வினா எண் 250—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி வட்டம் ஆயக்குடி பேரூராட்சிக்கு வரதமா நதி அணையிலிருந்து குடி நீர் கொண்டு வரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இந்த ஆண்டுக்குள் அத்திட்டம் நிறைவேற்றித் தரப் படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) செயலாக்கத்திலுள்ளது.

(ஆ) மார்ச் 1982-க்குள் முடிவுறும் என எதிர் பார்க்கப் படுகிறது.

1981 பிப்ரவரி 9]

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இந்த ஆயக்குடி குடிநீர் திட்டத்திற்கு ஒரு வருஷத்திற்கு முன்பே அரசு அனுமதி அளித்துள்ளது. சென்ற 6 மாதத்திற்கு முன்பு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. ஆனால் இது வரையில் வேலை ஒன்றும் துவங்கப்படவில்லை. சென்ற நான்கு நாட்களுக்கு முன்னால் எனக்கு வந்த கடிதத்தில் 12.75 லட்ச ரூபாய் அந்தத் திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டது என்று தகவல் சொல்லியிருக்கிறார்கள். என்ன காரணத்திற்காக அந்தச் செலவு செய்யப்பட்டது என்கிற விவரத்தை அமைச்சர் அவர்கள் அளிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இது வரையில் அதற்காக கிட்டத்தட்ட 13 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, அங்கே சுமார் 13 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள். அந்த ஊர் என்னுடைய சொந்த ஊர். அங்கே எந்த வேலையும் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, அது குறித்த விவரங்களை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது வரையில் சுமார் 13 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் 1982 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிநீர்த்திட்டமாக இருந்தாலும், பாதாளச் சாக்கடை திட்டமாக இருந்தாலும், உத்தேசிக்கப்படுகிறது என்றுதான் சொல்கிறார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 13 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்.

கோட்டயடி கால்வாய்

*வினா எண் 251—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி தொகுதி புத்தனாறு சானலில் உள்ள கோட்டயடி கால்வாய் ஏற்படுத்த பல இலட்சம் ரூபாய் செலவு செய்தும், பாசன வசதிக்கு பயன்படாமல் உள்ளதா?

(ஆ) இதற்கு நிவாரணம் காண என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?